தரம் 10

முதலாந் தவணைப் பரீட்சை – 2018

குடியியற் கல்வி - I , II

நேரம் : 3 மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 - 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் மிகவும் பொருத்தமான அல்லது சரியான விடையைத் தெரிவுசெய்து உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் உரிய இலக்கத்திற்குப் புள்ளடி (X) இடுக.

01. உலகின் மிகவும் பழைமையான காலத்தில் அடையாளம் காணப்பட்ட ஆட்சி முறையாக விளங்குவது,
1. சனநாயக ஆட்சி 2. சோசலிச ஆட்சி 3. மன்னராட்சி 4. பிரபுத்துவ ஆட்சி

02. மிக நீண்ட காலமாக உலகில் இடம்பெற்று வந்த ஆட்சிமுறைகளிலே மிகவும் விரும்பப்படும் ஆட்சிமுறை,
1. மன்னராட்சி முறை 2. பாசிச ஆட்சி 3. ஜனநாயக ஆட்சி 4. குழு ஆட்சிமுறை

03. கிரேக்கத்தின் எதேன்ஸ் நகராட்சியில் இடம்பெற்ற சனநாயக அம்சம்,
1. நேரடி 2. நேரில் 3. கலப்பு 4. எதுவுமில்லை

04. "Demos" எனும் கிரேக்க மொழிச்சொல்லின் தமிழ் அர்த்தம்,
1. ஆட்சி 2. மக்கள் 3. நிர்வாகம் 4. மக்களாட்சி

05. இந்தியாவில் வஜ்ஜி எனும் ஆரியக்குடியேற்றமொன்றில் எந்நூற்றாண்டில் குழுவாட்சிமுறை நிலவியதாக வரலாறுகள் கூறுகளின்றன?
1. கி.மு 6 2. கி.பி 7 3. கி.பி 6 4. கி.மு 8

06. கி.பி எத்தனையாம் நூற்றாண்டின் பின் தேசிய அரசுகள் தோன்றின?
1. 5ஆம் நூற்றாண்டு 2. 10ஆம் நூற்றாண்டு 3. 15ஆம் நூற்றாண்டு 4. 18ஆம் நூற்றாண்டு

07. ஆங்கிலப் புரட்சியின் பின் உலகில் தோற்றம் பெற்ற முதல் பாராளுமன்றம்.
1. இந்தியப்பாராளுமன்றம் 2. பிரித்தானியப் பாராளுமன்றம்
3. இலங்கைப் பாராளுமன்றம் 4. கனேடியப் பாராளுமன்றம்

08. "சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் ஆட்சிமுறையாகும்" என சனநாயகம் பற்றி வரைவிலக்கணம் செய்தவர்,
1. ஆப்ரகாம்லிங்கன் 2. கானர் 3. சீலர் 4. டைசி

09. இலங்கையருக்கு முதன்முதலாக எவ்வித வேறுபாடுகளும் இன்றி சர்வசன வாக்குரிமையை வழங்கிய யாப்பு,
1. கோல்புறூக் 2. குருமக்கலம் 3. டொனமூர் 4. மனிங்

10. இலங்கையில் மைத்திரிப்பாலசிறிசேன அவர்களால் அமைக்கப்பட்டு தற்போது தொழிற்படும் அரசாங்கம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. ஏகபோக அரசாங்கம் 2. தேசிய அரசாங்கம்
3. சுதந்திரக்கட்சி அரசாங்கம் 4. குடும்பஅரசாங்கம்

11. இருகட்சி முறையைப் பின்பற்றிவருகின்ற நாடு,
1. ஐக்கிய அமெரிக்கா 2. இலங்கை 3. பிரான்ஸ் 4. சீனா

Scanned by CamScanner

12. உலகில் ஒரு கட்சிமுறையைப் பின்பற்றும் இரு நாடுகளாவன,
1. இலங்கை, பிரித்தானியா
2. இலங்கை, இந்தியா
3. சீனா, கியுபா
4. பிரித்தானியா, வடகொரியா

13. இலங்கையிலுள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை,
1. 22 2. 25 3. 18 4. 23

14. இலங்கையிலுள்ள மொத்த நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை,
1. 22 2. 25 3. 23 4. 21

15. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக மதிக்கப்படுவது,
1. அரசியலமைப்பு 2. பொதுத்துறை 3. பொலிஸ் 4. பணிக்குழுவினர்

16. இலங்கையருக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த அரசியலமைப்பு,
1. 1ஆம் குடியரசு யாப்பு 2. சோல்பரி யாப்பு 3. டொனமூர் யாப்பு 4. குருமக்கலம் யாப்பு

17. சட்டாட்சிக் கோட்பாட்டினை முன்வைத்த அறிஞர்,
1. காணர் 2. A.V டைசி 3. ஆபிரகாம் லிங்கன் 4. மொண்ட்ஸ்கியு

18. ஒற்றையாட்சி முறையினைப் பின்பற்றிவருகின்ற நாடுகள்,
1. இலங்கை, இந்தியா
2. இலங்கை, பிரித்தானியா
3. இலங்கை, அமெரிக்கா
4. இலங்கை, சுவிட்சலாந்து

19. இலங்கை எவ்யாப்பின் கீழ்த் தன்னை ஓர் ஒற்றையாட்சிக் குடியரசாக பிரகடனம் செய்தது?
1. 1ஆம் குடியரசு யாப்பு 2. 2ஆம் குடியரசு யாப்பு 3. சோல்பரி யாப்பு 4. டொனமூர் யாப்பு

20. மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசாங்கம் எனக் கூறிய அறிஞர்,
1. பேராசிரியர் காணர்
2. சீலர்
3. அரிஸ்டோட்டில்
4. சேர் வின்ஸ்ரன்சேர்ச்சில்

21. நீதி, நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை உடைய அரசாங்கத்தின் துறை,
1. சட்டத்துறை 2. நிர்வாகத்துறை 3. நீதித்துறை 4.ஆயுதமேந்திய முப்படை

22. இலங்கையில் தேர்தல்கள் தொடர்பான அனைத்து அதிகாரத்தைக் கொண்ட ஆணைக்குழு,
1. பொதுச்சேவை ஆணைக்குழு
2. பொலிஸ் ஆணைக்குழு
3. நீதிச்சேவை ஆணைக்குழு
4. தேர்தல்கள் ஆணைக்குழு

23. 1948ஆம் ஆண்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு,
1. சமூக பொருளாதார சபை
2. பொதுச்சபை
3. பாதுகாப்புச் சபை
4. நம்பிக்கைப் பொறுப்புச்சபை

24. இலங்கையில் இருசபை கொண்ட பாராளுமன்றத்தினை அறிமுகம் செய்த அரசியலமைப்பு,
1. 2ஆம் குடியரசு யாப்பு
2. கோல்புறூக்
3. சோல்பரி யாப்பு
4. 1972 1ஆம் குடியரசு யாப்பு

25. இலங்கையருக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை வழங்கிய யாப்பு,
1. 2ஆம் குடியரசு யாப்பு 2. 1ஆம் குடியரசு யாப்பு 3. டொனமூர் 4. குருமக்கலம்

26. 1978ஆம் ஆண்டின் 2ஆம் குடியரசு யாப்பின்படி நிர்வாக அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான நிர்வாகி,
1. ஜனாதிபதி 2. பிரதமர் 3. சபாநாயகர் 4. ஆளுநர்

Scanned by CamScanner

27. இலங்கையின் நிர்வாக அதிகாரப் பன்முகப்படுத்தலின்படி மாவட்ட நிர்வாகத்திற்குப் பொறுப்பதிகாரி,
1. பிரதேச செயலாளர் 2. அமைச்சின் செயலாளர் 3. கிராம சேவகர் 4. மாவட்ட செயலாளர்

28. இலங்கையில் மாகாணசபை முறையைத் தாபித்த அரசியலமைப்புத் திருத்தம்,
1. 13ஆம் திருத்தம் 2. 17ஆம் திருத்தம் 3. 18ஆம் திருத்தம் 4. 19ஆம் திருத்தம்

29. உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எச்சந்தர்ப்பத்திலும் மீளப்பெறும் அதிகாரம் உள்ள அமைப்பு,
1. மத்தியரசு
2. உள்ளூராட்சி அமைச்சு
3. மகாணசபை
4. முதலமைச்சின் செயலகம்

30. "எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவத்தினுள் குவிந்திருப்பின் அது ஒற்றையாட்சி முறை" எனக் குறிப்பிட்ட அறிஞர்,
1. அரிஸ்டோட்டில்
2. போராசிரியர் காணர்
3. பிளட்டோ
4. பேராசிரியர் ஹர்மன் ஜே பைனர்

31. அதிகாரப் பன்முகப்படத்தலின் அடிப்படையில் தேசிய மட்டத்திற்கு நிர்வாகப் பொறுப்பு மிக்க அதிகாரியாகச் செயலாற்றுபவர்,
1. அமைச்சின் செயலாளர்
2. மாவட்ட செயலாளர்
3. பிரதேச செயலாளர்
4. கிராம அலுவலகர்

32. சுவிட்சலாந்து நாட்டின் பிராந்திய அலகுகள் அழைக்கப்படுவது,
1. மாநிலங்கள் 2. கன்ரன்கள் 3. மாவட்டங்கள் 4. அமையங்கள்

33. "வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சிமுறை சமஷ்டி" என சமஷ்டி ஆட்சிக்கு விளக்கமளித்தவர்,
1. A.V டைசி 2. கே.சி. வியர் 3. ஆபிரகாம்லிங்கன் 4. காணர்

34. மாவட்ட சபைகள் முறையினைத் தாபித்துக் கொண்ட வருடம்,
1. 1972 2. 1973 3. 1980 4. 1981

35. அதிகாரப் பங்கீடு தொடர்பான SWRD பண்டாரநாயக்கா மலைநாட்டுப் பகுதிக்கு சமஷ்டியின் தேவைபற்றிக் கூறிய ஆண்டு,
1. 1950 2. 1956 3. 1920 4. 1926

36. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பண்டா - செல்வா ஒப்பந்தம் இடம்பெற்ற ஆண்டு,
1. 1926 2. 1957 3. 1965 4. 1967

37. மாகாண சபையொன்றில் தொழிற்படும் ஆளுநரை நியமனம் செய்யும் அதிகாரம் மிக்க நிர்வாகி,
1. பிரதமர் 2. சபாநாயகர் 3. முதலமைச்சர் 4. ஜனாதிபதி

38. 1978 2ஆம் குடியரசு யாப்பில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட யாப்புத்திருத்தம் அழைக்கப்படுவது,
1. 13ஆம் திருத்தம் 2. 17ஆம் திருத்தம் 3. 18ஆம் திருத்தம் 4. 19ஆம் திருத்தம்

39. உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவெனப் புதிதாக அறிமுகம் செய்துள்ள தேர்தல்முறை,
1. பிரதேசவாரி
2. தொகுதிவாரி
3. விகிதாசாரம்
4. வட்டாரமுறையோடு விகிதாசாரம்

40. இலங்கையில் தற்போதைய பிரதமமந்திரியாத் தொழிற்படும் ரணில் விக்கிரமசிங்க பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சி,
1. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
2. ஐக்கியதேசியச் கட்சி
3. மக்கள் விடுதலை முன்னணி
4. ஜாதிக ஹெல உறுமய

(40புள்ளிகள்)

Scanned by CamScanner

பகுதி - II

- முதலாம் வினா கட்டாமானதாகும்.
- முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) i. ஆரம்பகாலம் முதல் இன்றுவரை உலகில் நிலவி வந்துள்ள ஆட்சி முறைகளுள் இரண்டினைத் தருக.
ii. கிரேக்க நகராட்சி முறையின் பிரதான பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
iii. நீர் அறிந்த உலகில் இடம்பெற்ற இரு புரட்சிகளினை ஆண்டுகளுடன் பெயரிடுக.
iv. நேரில் ஜனநாயகம் தோற்றம் பெற்றமைக்குச் சாதகமாக அமைந்த இரு காரணிகளைத் தருக.
v. நீர் அறிந்த இலங்கையில் தொழிற்படும் தேர்தல் மாவட்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
vi. சனநாயக நாடொன்று அதன் யாப்பிற்கேற்ப செயற்படுவதனால் ஏற்படும் இரண்டு நன்மைகளைத் தருக.
vii. அரசின் கூறுகளில் ஒன்றான நிலம் / ஆட்புலத்தினுள் உள்ளடக்கப்படும் பௌதிகக் கூறுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
viii. சமஷ்டியாட்சி முறையின் பிரதிகூலங்கள் இரண்டினை அடையாளப்படுத்துக.
ix. ஐக்கிய அமெரிக்க சமஷ்டியில் மத்தியரசு பெற்றுள்ள பிரதான அதிகாரங்கள் இரண்டினைத் தருக.
x. சுவிட்சர்லாந்து சமஷ்டியில் கன்ரன்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு அதிகாரங்களைத் தருக.
(20புள்ளிகள்)

02) i. ஜனநாயகம் பற்றி வரைவிலக்கணம் முன்வைத்த இரு அறிஞர்களைக் கூறுக.
ii. ஜனநாயக ஆட்சிமுறையின் இரண்டு பிரதான பிளவுகளையும் குறிப்பிடுக.
iii. ஜனநாயக ஆடசிமுறையின் முக்கியத்துவம் நான்கினைக் குறிப்பிட்டு, ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(10புள்ளிகள்)

03) i. ஒருகட்சிமுறை என்றால் என்ன?
ii. அரசியல் கட்சி முறையின் நன்மைகள் மூன்று தருக.
iii. சனநாயக நாடொன்றில் எதிர்க்கட்சியின் பொறப்புக்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(10புள்ளிகள்)

04) i. சட்டாட்சி என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
ii. சட்டாட்சியின் நடைமுறைப் பண்புகள் மூன்று தருக.
iii. அரசொன்றின் மூலக்கூறுகள் நான்கினுள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(10புள்ளிகள்)

05) i. தற்காலத்தில் செயற்படும் அரசாங்க முறைகள் இரண்டையும் தருக.
ii. அரசாங்கம் ஒன்றின் முத்துறைகளையும் அவற்றின் பிரதான பணியினையும் குறிப்பிடுக.
iii. சனநாயக ஆட்சிமுறையிலுள்ள பிரஜை ஒருவரிடம் காணப்படவேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(10புள்ளிகள்)

06) i. அதிகாரம் என்னும் எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.
ii. 1978 ஆண்டின் யாப்பின்படி மக்களது இறைமை செயற்படுத்தப்படும் மூன்று விதங்களையும் குறிப்பிடுக.
iii. அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் எனும் அம்சத்தை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
(10புள்ளிகள்)

07) i. ஒற்றையாட்சி அரசு என்பதை வரையறை செய்க.
ii. சமஸ்டி அரசொன்றின் பண்புகள் மூன்றினைத் தருக.
iii. சமஸ்டி அரசொன்றின் நடைமுறைப் போக்குகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.
(10புள்ளிகள்)

Scanned by CamScanner